முற்பகல் 10-25

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவிநாசி புதியதாக உருவாக்கப்பட்டிருக்கிற ஒரு வட்டத் தலைநகராகும். அதுவும் கோவை மாவட்டத்திலே அதிகமான போக்குவரத்து இருக்கின்ற இடமாகவும் அவிநாசி இருக்கிறது. தாலுக்கா தலைமையிடங்களில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படும் என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படி பெரிய நகரமாக வளர்ந்து வருகிற அவிநாசியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஒன்று அமைப்பதற்கு மறுபரிசீலனை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பது என்பது அரசு விதித்திருக்கிற பல்வேறு விதிகளுக்கேற்ப நாம் அமைத்துக் கொண்டிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் 33 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் இருக்கின்றன. வாகன எண்ணிக்கை அடிப்படையில் அவைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அதிலே பகுதி அலுவலகங்கள் 29 இருக்கின்றன. சோதனைச் சாவடிகள் இப்போது 15 இயங்கிக் கொண்டிருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் போல அவிநாசியில் வட்டார போக்குவரத்து அலுவலகம் அமைக்கிற சாத்தியக் கூறுகள் இப்போது அங்கே இல்லை. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மொத்த வாகன எண்ணிக்கை 18,64,776. போன ஆண்டு அதிலே வந்த வருமானம் 250 கோடி ரூபாய். இந்த ஆண்டு அது 305 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 549. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

549—

இராமேஸ்வரம்—முயல் தீவு, நல்ல தண்ணீர் தீவுகளுக்குப் படகுப் போக்குவரத்து.

*16542—டாக்டர் எஸ். சுந்தரராஜ்—

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1993 ஏப்ரல் 30

(அ) இராமேஸ்வரத்தில் இருந்து முயல்தீவு, நல்ல தண்ணீர் தீவுகளுக்கு படகு போக்குவரத்து விட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் பகுதியில் பாம்பன் பாலம் கட்டிய பிறகு அதிகமான போக்குவரத்து ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இராமேஸ்வரம் பகுதிக்கு வட நாட்டிலிருந்து அதிகம் பேர் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் சுற்றுலாத் துறையை வருமானம் மிக்க துறையாக மாற்றியிருக்கிற, இந்த வேளையில் மக்களைக் கவருகின்ற வகையில் முயல்தீவு நல்லதண்ணீர் தீவு போன்ற இராமேஸ்வரத்தைச் சுற்றியிருக்கிற தீவுகளுக்குப் படகுப் போக்குவரத்து விடுவதன் மூலம் சுற்றுலாப் பயணிகளைக் கவருகிற வகையிலும் அரசுக்கு அதிகமான வருமானத்தைப் பெறுகின்ற வகையிலும் அங்கே படகுப் போக்குவரத்து விட முக்கியத்துவம் கொடுத்து அரசின் முடிவை மறுபரிசீலனை செய்ய ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகத்தின் கப்பல்கள் மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை எடுத்துச் செல்வதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் அந்த நிறுவனத்தின் கப்பல்கள் கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து விவேகானந்தர் நினைவு மண்டபம் வரையிலும் படகு விடுகிற அந்தப் பணியையும் மேற்கொண்டிருக்கின்றன. ஆகவே வேறு இடங்களில் படகு விடுகின்ற சாத்தியக்கூறுகள் இல்லை. அதற்குக் காரணம் படகுகளை நாம் இயக்குகிறபோது அதற்குத் தேவையான சுற்றுலாப் பயணிகள் அங்கே போதுமான அளவில் வர வேண்டும். கூடுதலாக செலவாகிற காரணத்தால் அதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்று நான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுற்றுலாத்துறை

மூலமாகவோ மீன் வளர்ச்சிக் கழகம் மூலமாகவோ அல்லது பொதுப்பணித் துறை மூலமாகவோ இந்த கோரிக்கையை வைத்தால் அவர்கள் படகு விடுகிற சாத்தியக் கூறுகளை ஆராய்வார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, அங்கே படகுகள் விடுவதற்காக மத்திய அரசு ஏதேனும் திட்டத்தை ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அறிக்கை வாங்கியுள்ளதா? அவ்வாறு இருப்பின் கொடைக்கானல் ஏரியில் இருப்பதைப் போல தனியாருக்கு படகுப் போக்குவரத்து விடுவதற்கு அனுமதி வழங்க அமைச்சர் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்திலிருந்து முயல் தீவு, நல்ல தண்ணீர் தீவு வரையிலும் இது போன்ற ஆய்வுகள் நடைபெறவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் வைத்த இந்தக் கோரிக்கையை வைத்து மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் கடல் பகுதியில் முல்லைத் தீவு, நல்லதண்ணீர்த் தீவு, குருசடைத் தீவு இன்னும் ஏறக்குறைய 15 தீவுகள் கரையிலிருந்து 1 கி.மீ., 2 கி.மீ. தொலைவில் உள்ளன. அந்தத் தீவுகளில் சிலவற்றை தேசியப் பூங்காவாக அங்கீகரித்து அதன்பேரில் சுற்றுலாத்துறை மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இராமேஸ்வரத்திற்கு வெளிநாட்டு யாத்ரீகர்களும் வட இந்திய மாநில யாத்ரீகர்களும் அதிகமாக வருகின்றனர். பல வெளிநாடுகளுக்கு நாம் செல்லும்போது சிறிய தீவுகளைக்கூட அங்கே சுற்றுலா மையங்களாக ஆக்கி அங்கே பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி மிகப் பெரிய அளவில் அன்னியச் செலவாணியை ஈட்டுகின்றார்கள். அந்த வகையில் நம் தமிழகத்திற்கு அன்னியச் செலவாணி கிடைக்கிற வகையில் இந்தத் தீவுகளுக்கு வெளிநாட்டுப் பயணிகளைக் கவர்கிற வகையில் படகுப் போக்குவரத்தை ஏற்படுத்தி அங்கே பொழுது போக்குவதற்கும் ஏற்பாடுகளைச் செய்வோமானால் நல்ல வருவாய் தமிழகத்திற்குக் கிடைக்கும். ஆகவே இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்கள் துறையின் மூலமாகவோ அல்லது வேறு துறையின் மூலமாகவோ நடவடிக்கையெடுக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1993 ஏப்ரல் 30

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீவுகளைப் பொறுத்தவரையில் தென்னந்தோப்புகளும் மற்றும் சில வகையான மரங்கள் மட்டும் தான் அங்கே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இது போன்ற நடவடிக்கைககளை மேற்கொண்டு அந்தத் தீவுகளுக்குப் படகுப் போக்குவரத்து விடுவதைக் குறித்து சுற்றுலாத்துறை தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இராமேஸ்வரம் மிகப் பெரிய புண்ணியத் தலமாக இருக்கிறது. வடபுலத்திலிருந்து பக்தர்கள் நிரம்ப வருகிறார்கள். அதுமட்டுமல்ல, அங்கே பாம்பனுக்கும் மண்டபத்திற்கும் இடையே இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்கு கடலில் பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அதைப் பார்ப்பதற்கு பலபேர் வருகிறார்கள். ஆகவே அங்கே வருகிற சுற்றுலாப் பயணிகளைக்கவர்கின்ற வகையில் அங்கே வருகிற பக்தர்களையும் மகிழ்ச்சி அடையச் செய்கிற வகையில் பல தீவுகளுக்கு அந்தத் தலைமன்னாரில் 25-க்கும் அதிகமான தீவுகள் இருக்கின்றன. அந்தத் தீவுகளுக்கு பாம்பனிலிருந்து படகுப் போக்குவரத்து ஏற்படுத்தினால் அது நல்ல வருவாய் ஈட்டித்தரும். அதுமட்டுமல்லாமல் அந்தத் குருசடைத் தீவு, முயல் தீவு, நல்ல தண்ணீர் தீவு போன்ற தீவுகள் நம்முடைய வனத்துறை அமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் தான் இருக்கின்றன. ஆகவே அந்தத் தீவுகளைப் பார்வையிடுவதற்கு நம்முடைய வனத்துறை அமைச்சர் அவர்கள் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்திற்கு வருகிற பக்தர்கள் மகிழ்ச்சியோடு செல்கிற வகையில் இந்தத் தீவுகளுக்கு சுற்றுலாப் பயணிகளைக் கவர்கிற வகையில் படகுப் போக்குவரத்து விடப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மேலும் அமைச்சர் அவர்கள் அங்கே வருகை தருவார்களா என்றும் கேட்டார்கள். நான் மிக விரைவாக வருகை தருவேன் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்று இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்தவர்களும் இந்தக் கோரிக்கையை

1993 ஏப்ரல் 30]

வலியுறுத்தி இருக்கிறார்கள். நான் நேரிடையாகப் பார்வையிட்டதற்கு பிறகு அங்கே படகுகள் விடலாமா, எவ்வளவு எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என்பதையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு பேசி அதற்கு பிறகு நல்ல முடிவு மேற்கொள்ளப் படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 550, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

550—

கொடுமுடியில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம்.

*12245—திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடி பேரூராட்சியில் பொதுமக்கள் நலனுக்காக இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திட்டம் ஏதும் இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இல்லையென்ற பதிலை இரண்டாவது முறையாக இந்தப் பேரவையில் எடுத்து வைத்திருக்கிறார்கள். நானும் மூன்றாவது முறையாக நன்றே செய்க அதையும் அன்றே செய்க என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சியில் மூன்றாவது முறையாகவும் இந்தக் கோரிக்கையை வைத்து கொடுமுடி மாநகர் ஒரு புண்ணியத் தலமாக ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 3½ லட்சம் மக்கள் தொகையை கொண்ட நகராக இருக்கிறது. கிட்டத்தட்ட 10 லட்சம்